07-06-2021 அன்று காலை 11.00 மணிக்கு
நடைபெற்ற கூட்ட நிகழ்வுகள்

தலைமை: [illegible]
தனி அலுவலர் அவர்கள்

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் கீழ்கண்ட இரண்டு குத்தகை இனங்கள் 31-03-2021 உடன் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் தேர்தல் நன்னடத்தை விதிகளின் காரணமாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்5304/2021/ஆர்2 நாள்.16.03.2021ன் படி மேலும் இரண்டு மாத காலத்திற்கு கீழ்கண்ட குத்தகை இனத்தினை 2020-2021ம் ஆண்டுக்கான குத்தகைத் தொகையில் அனுபவித்துக் கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 31-05-2021 முதல் கீழ்கண்ட இரண்டு குத்தகை இனங்கள் அனுபவ காலம் முடிவடைந்து விட்டதால், உடன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதற்கும், தற்பொழுது கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைக்காக தமிழ்நாடு அரசால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளின் காரணமாக பொது போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதால் பேருந்து நிலையத்தில் வாகனங்கள் மற்றும் பயணிகள் வரத்து ஏதும் இல்லாத காரணத்தினால் இருசக்கர வாகன காப்பகம் 01-06-2021 முதல் செயல்படவில்லை என்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏலப் பொறுப்புத் தொகை ரூ | கூடுதல் வைப்பு தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகம் குத்தகை உரிமம் | 1,00,000/- | 1,00,000/- |
| 2. | முத்துசாமி பூங்காவில் உள்ள பலன் தரும் மரங்கள் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பலன் தரும் மரங்கள் குத்தகை உரிமம் | 5,000/- | 5,000/- |

ந.க.எண்: 3090/2015/அ2

அலுவலகக் குறிப்பு ;

1. ஆண்டு குத்தகை இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைக்காக தமிழ்நாடு அரசால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள விதிகளின் காரணமாக பொது போக்குவரத்து தடை செய்யப்பட்டு பேருந்து நிலையத்தில் வாகனங்கள் மற்றும் பயணிகள் வரத்து ஏதும் இல்லாத காரணத்தினால் இருசக்கர வாகன காப்பகம் 01-06-2021 முதல் செயல்படவில்லை என்பதனையும் மன்றம் பதிவு செய்து அங்கீகரிக்கலாம்.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான மாத வாடகை குத்தகை இனங்களில் கீழ்கண்ட 90 கடையானது நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 92 நாள் 03-07-2007ன் படி 9 வருடங்கள் முடிவடைந்த கடைகளுக்கு சந்தை மதிப்பீட்டில் புதிதாக மாத வாடகை நிர்ணயம் செய்து வழங்கப்பட்டதனை ஆட்சேபித்து பழைய குத்தகைதாரர் கீழ்கண்ட கடையினை இந்நகராட்சிக்கு 31-03-2018ல் ஒப்படைத்து விட்டதால், கீழ்கண்ட கடையினை தற்பொழுது பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏலப் பொறுப்புத் தொகை ரூ | கூடுதல் வைப்பு தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய கடை எண் 49W | 1,00,000/- | 1,00,000/- |

ந.க.எண்: 3090/2015/அ2

அலுவலகக் குறிப்பு ;

1. மாத வாடகை குத்தகை இனத்தினை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2021-2022ம் ஆண்டிற்கு தேவையான நீர்த்திய சுண்ணாம்புத் தூள் ப்ளீச்சிங் பவுடர், பினாயில் விநோயகம் செய்ய 02.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | ஆரீஸ் கெமிக்கல்ஸ், செங்கோட்டை | தனுஸ்யா கெமிக்கல்ஸ், செங்கோட்டை |
|---|---|---|---|
| 1 | நீர்த்திய சுண்ணாம்புத் தூள் (கிலோ ஒன்றுக்கு) | ரூ. 13/- | ரூ. 15/- |
| 2 | ப்ளீச்சிங் பவுடர் (கிலோ ஒன்றுக்கு) | ரூ. 49/- | ரூ. 52/- |
| 3 | பினாயில் (லிட்டர் ஒன்றுக்கு) | ரூ. 60/- | ரூ. 65/- |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலை விகிதம் வழங்கியுள்ள ஆரீஸ் கெமிக்கல்ஸ், செங்கோட்டை நிறுவனத்தின் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>மன்றப்பொருள்</u>

தென்காசி மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு பணி முடிவறிக்கை தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் இருந்து தொகை பெறப்பட்ட பின்னரே ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டும் எனவும், தவிர்க்க இயலாத காரணத்தினால் அலுவலக பொது நிதியில் இருந்து வழங்க நேரிட்டால் உரிய விளக்கத்துடன் பணி முடிவறிக்கையினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் பொது நிதியில் இருந்து தொகை வழங்கப்பட்டால் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் அறிவுரை கடிதம் ந.க.எண் அ8/530/2020 நாள் 01-06-2021 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்;327/ 2020/ இ1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் பதிவு செய்யலாம்.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி பகுதியில் கொரானா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் இருந்து பெறப்பட்ட மாஸ்க், கையுறை மற்றும் அலுவலக தூய்மை பணியாளர்கள் பயன்படுத்தும் மாஸ்க், கையுறை, முழுகவச உடை ஆகியவற்றை பொது மக்களின் சுகாதாரம் கருதியும், இந்நகராட்சி குப்பைக் கிடங்கில் சேரா வண்ணம் உயிரி மருத்துவக் கழிவுகளை மஞ்சள் பையில் தனியாக கட்டி Aspectic Biomedical Waste Management Company என்ற நிறுவனம் பெற்றுக் கொள்வதற்கு இந்நகராட்சி சார்பில் மேற்கண்ட நிறுவனத்துடன் 27-05-2021 முதல் 31-03-2022 வரை உள்ள காலத்திற்கு Bio Medical COVID-19 Waste Treatment & Disposal செய்தவதற்கு மாதத்திற்கு கட்டணம் ரூ.12,000 என்ற வீதத்தில் செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் :

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 20452/2020/LA3 நாள் 31.03.2021ன் படி 15வது மத்திய நிதிக் குழு பரிந்துரை திட்டத்தின் கீழ் மானியமாக இந்நகராட்சிக்கு ரூ.32,59,098/- இரண்டாவது தவணை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு மேற்படி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகள் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | Name of the work | Estimate amount Rs.in lakhs |
|---|---|---|
| 1 | Supply and Installation of bailing machine at compostyard Elathur Road,Sengottai Municipality | 5.60 |
| 2 | Providing Distribution pipeline at Gandhi road(from pump house road junction to Vanjinathan statue) for Kalankarai water supply, Erection of motors and fittings at head works Sengottai Municipality. | 27.00 |

(ந.க.எண் ; 1117/2020/இ1)

அலுவலகக் குறிப்பு ;

1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2) மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேற்காணும் பணிகள் செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்